**மீன்பிடி வெகுமதி நிதியம் - 2022**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீன்பிடி வெகுமதி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1996 இன் 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல் வள சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால்

எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும், நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மீன்பிடி வெகுமதி நிதியத்தின் நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது கிடைக்க வேண்டிய வருமானம் இனங்காணப்படாதிருந்ததுடன், குறிப்பு இலக்கம் 07 இன் பிரகாரம் கணக்கீட்டு கொள்கை அட்டுறு அடிப்படையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்று காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். எதிர்வரும்ஆண்டில் பெறவேண்டிய வருமானத்தை சரியாக இனங்கண்டு சமர்ப்பிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அட்டுறு அடிப்படையில் நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| சுற்றிவளைப்புக்களுக்கு பங்களித்த உத்தியோகத்தர் | 1,907,760 | 1,043,435 | 864,325 | செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான மீதியை இனங்கண்டு தீர்த்து | செலுத்த வேண்டிய மீதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய |

| | | |
|---|---|---|
| களுக்கு செலுத்த வேண்டிய படிகள். | வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வேண்டியிருந்ததுடன், அதற்கு நேரொத்த பட்டோலைகளும் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசேட்டில் காணப்பட்ட ரூபா 9,848,765 ஆன மீதியில் வெகுமதியாக பரிசு பெறுனர்களுக்கு செலுத்த வேண்டிய பணம் மற்றும் அதற்குரியதாக செலுத்த வேண்டிய அரசாங்கத்தின் பங்களிப்பு காண்பிக்கப்படுகின்ற போதிலும் செலுத்த வேண்டியதாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,907,760 தவிர எஞ்சிய தொகையான ரூபா 7,941,005 மீதியில் இதுவரை குறிப்பாக இனங்காணப்படாத மீதி மற்றும் அரச வருமானமாக காணப்படுவதுடன், அந்த மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றிவளைப்புக்களுக்காக பங்களித்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய பணம் மற்றும் அதற்குரியதாக செலுத்த வேண்டிய அரசாங்கத்தின் பங்களிப்பான ரூபா 9,848,765.00 ஆன மீதி ஒவ்வொரு மாவட்ட அலுவலகங்களில் இருந்தும் தகவல்களை பெற்று தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மாவட்ட மீன்பிடி அலுவலகங்களில் இருந்து சரியான தகவல்களை பெற்று செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1996 இன் 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல் வள சட்டத்தின் 59(2) ஆம் பிரிவு | (i) | வெகுமதி நிதியத்தின் நிர்வாகம் தொடர்பாக பணிப்பாளர் நாயகம் பொறுப்புடையவராக இருக்க வேண்டிய போதிலும், மீன்பிடி மற்றும் நீரியல் வள திணைக்களத்தால் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டங்களில் வெகுமதி | மாவட்ட மீன்பிடி அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தின் புலனாய்வு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றிவளைப்பு, வழங்கு தொடருதல் மற்றும் பரிசோதனை செய்தல் தொடர்பாக திணைக்களத்தின் | சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பான சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் வழக்கு தொடரும் நடவடிக்கைகளுக்காக திட்டம் தயாரிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்தின் பணியான சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் வழக்கு தொடரும் நடவடிக்கைகளுக்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இலக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த வழக்கு தொடர்வதன் மூலம் மீன்பிடி வெகுமதி நிதியத்திற்காக பணம் செலவாகின்ற வழக்குகளின் அளவு தொடர்பாக எதிர்வுகூற முடியாதிருந்தமையால் அது தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வில்லை. | வேண்டும். |
| (ii) | சுற்றிவளைப்புக்களுக்கு பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி பணம் வழங்குதல் தாமதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே 348, 488, 427, 327, 604, 536, 692 மற்றும் 293 வழக்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2017, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் எந்தவொரு வெகுமதி தொகையும் செலுத்தப்படாதிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் 04 வழக்குகளுக்கு உரியதாக செலுத்தப்பட்ட படிகளின் அளவு ரூபா 10,528,987 மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய படிகள் ரூபா 1,907,760 ஆகும். இதன் பிரகாரம் | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் மீன்பிடி வெகுமதி நிதியத்தில் இருந்து உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி பணம் வழங்கும் திட்ட முறைமையில் ஏதாவது சிறிது பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்த தாமதத்தை தவிர்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் பின்னர் முறையான திட்டத்தில் அந்த நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் விரைவாக மீன்பிடி வெகுமதி நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், மாவட்ட மீன்பிடி அலுவலகங்களில் இருந்து சமர்ப்பிக்கப்படுகின்ற இதற்கான தேவையான ஆவணங்களில் குறைபாடுகளின் காரணமாக செலுத்துதல் தாமதமடைந்த சந்தர்ப்பங்களை காணக்கூடியதாக உள்ளது. அது தொடர்பாக அந்த மாவட்ட உதவி பணிப்பாளருக்கு மீள் நினைவூட்டல் வழங்கப்பட்டுள்ளது. | வெகுமதி பணத்தை வழங்குவதை துரிதமாக்குவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி பணம் வழங்குவதற்காக விரைவான திட்டமுறைமையொன்று தயாரிக்காமையின் காரணமாக சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளை சுற்றிவளைப்பதற்கான உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,637,671 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 197,873 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் 3,439,798 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் விற்பனையால் கிடைத்த வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட 293 வழக்குகளை காணக் கூடியதாக இருந்த போதிலும், புலனாய்வு பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 303 ஆகும். | 2022 ஆம் ஆண்டிற்காக மீன்பிடி வெகுமதி நிதியம் தொடர்பான செயலாற்றல் அறிக்கைகளுக்கான தகவல்களை பெற்றுக் கொள்ளும் போது மாவட்ட அலுவலங்களில் இருந்து ஆண்டின் இறுதியில் எழுத்துமூலம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மொத்த வழக்குகளின் எண்ணிக்கை கணனி மயப்படுத்தப்பட்ட தரவு மூலத்தில் (Google sheet) நாளதுவரையாக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டிருந்தது. வேறுபாடுகள் ஏற்பட்டுள்ள மாவட்ட அலுவலகங்களுக்கு 2023 ஆம் ஆண்டின் போது | வழக்கு தொடர்பான சரியான தகவல்களை பெற்று செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தகவல்களை பெற்றுக் கொள்ளும் போது சரியான தகவல்களை வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் சகல மாவட்ட அலுவலகங்கள் ஊடாகவும் 293 வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் 03 மாவட்ட மீன்பிடி அலுவலகங்களில் இருந்து மாத்திரம் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் விற்பனை வருமானம் பரிசு நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. 13 மாவட்ட மீன்பிடி அலுவலங்களில் இருந்து பரிசு நிதியத்திற்கு வருமானம் கிடைக்காமை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழங்குகளில் வழங்கு பொருட்கள் இருக்குமாயின் அந்த வழக்கு பொருட்கள் அரசுடமையாக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அவை ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்ற பணம் மீன்பிடி வெகுமதி நிதியத்தில் செலவு வைக்கப்படுகின்றது. அவ்வாறு 2022 ஆம் ஆண்டில் 03 மீன்பிடி அலுவலகங்களில் தொடரப்பட்ட வழக்குகளில் மாத்திரம் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் காணப்பட்டது. அவை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு அந்த பணம் மீன்பிடி வெகுமதி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது. | சகல மாவட்ட மீன்பிடி அலுவலகங்களில் இருந்தும் வெகுமதி நிதியத்திற்கு வருமானம் கிடைக்காமை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | முடிவடைந்த வழக்கு தீர்ப்பின் பிரகாரம் குற்றமிழைத்தவர்களினால் நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்ட பணம் மாவட்ட மீன்பிடி அலுவலகங்களுக்கு அறிவித்து விரைவாக நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீன்பிடி வெகுமதி நிதியம் தொடர்பாக உரிய வழக்கு தொடரப்பட்ட மாவட்டங்களின் உத்தியோகத்தர்களால் நீதிமன்றத்தில் கோரிக்கை விடப்படுவதுடன், அந்த செலவு வைத்தல் தொடர்பான தகவல்கள் புலனாய்வு பிரிவிற்கு அந்த உத்தியோகத்தர்களாலேயே வழங்க வேண்டியிருந்தது. அவ்வாறு தகவல்கள் வழங்கும் போது ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக செலுத்துவதற்கும் தாமதம் ஏற்பட்டிருந்தமை, தகவல்கள் சரியாக நாளதுவரையாக்கப்படாமை போன்ற குறைபாடுகள் ஏற்பட்டிருந்தன. அந்த குறைபாடுகளை மாற்றியமைப்பதற்காக வழக்கு முடிவடைந்த உடன் மீன்பிடி வெகுமதி நிதியத்தில் செலுத்துவதற்காக தேவையான ஆவணங்கள் புலானய்வு பிரிவிற்கு அனுப்புமாறு உதவி | பூர்த்தி அடைந்த வழக்குகளின் தீர்ப்பின் பிரகாரம் நீதிமன்றங்களில் வைப்புச் செய்யப்பட்ட பணம் மாவட்ட மீன்பிடி அலுவலங்களுக்கு அறிவித்து விரைவாக நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பரிசு நலனாளிகளை இனங்காணும் வகையில் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற விடத்து கடற்படையினால் கைது செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் ஒற்றர்களின் ஊடாக செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட மீன்பிடி அலுவலகங்களில் பரிசோதனை செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான ஆவணப்படுத்தலொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், வெகுமதி தொடர்பாக பொது மக்களுக்கு அறிவித்து சட்டவிரோத சுற்றிவளைப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் செயற்பட்டிருக்கவில்லை. 1996 இன் 02 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல் வள சட்டத்தின் 59(1) ஆம் பிரிவின் கீழ் இந்த நிதியம் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளை சுற்றிவளைப்பதற்காக உத்தயோகத்தர்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அந்த செயற்பாடுகள் தொடர்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் சம்பவங்களுக்குரியதாக தனித்தனியாக கோவைகள் பேணிச் செல்லப்படுகின்றது. அந்த கோவைகளில் அந்த சட்ட ரீதியான செயற்பாடுகளுக்காக பங்களிப்பை காண்பித்த சகலரும் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக சம்பவ திரட்டு குறிப்புக்கள் மூலமும் செயற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக குறிப்பிடப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக கணனி மயப்படுத்தப்பட்ட தரவு மூலமும் (Google sheet) அந்த தகவல்கள் பேணிச் செல்லவதற்கு 2022 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்கின்ற சகல சுற்றிவளைப்புக்கள் தொடர்பாகவும் பதிவேடொன்றை பேணிச் செல்லுமாறு புலனாய்வு பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வெகுமதி தொடர்பாக பொது மக்களுக்கு அறிவித்து மீன் வளத்தை பாதுகாப்பதற்கும் மற்றும் அரசாங்க வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவும் சட்டவிரோத சுற்றிவளைப்புக்களை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் செயற்படுதல் வேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட மீன்பிடி அலுவலகங்களினால் 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்குரியதாக தொடரப்பட்ட வழக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது புலானய்வு பிரிவு மற்றும் 09 மீன்பிடி மாவட்ட அலுவலங்களில் கோவையிடப்பட்ட 212 வழக்குகளாக காண்பிக்கப்பட்ட போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 127 வழக்குகள் தொடர்பான விபரங்கள் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இரண்டு அறிக்கைகளுக்காக வழக்கு எண்ணிக்கையை கணிப்பிடும் போது மேற்கொள்ளப்பட்டுள்ள தவறின் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் சரியாக உரிய தரவுகளை வழங்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் அறிக்கையில் சரியான தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டில் இருந்து நடைபெறுகின்ற வழக்கு தொடர்பான விபரங்கள் 2022 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. மாவட்ட மீன்பிடி அலுவலகங்களினால் தொடரப்பட்ட வழக்குகள், நடைபெற்ற வழக்குகள், அந்தந்த அலுவலகங்களின் கைப்பற்றப்பட்டு காணப்படுகின்ற பொருட்கள், முடிவடைடைந்த வழக்குகளில் வெகுமதி நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய பணம் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக தலைமை அலுவலகத்தின் புலனாய்வு பிரிவினால் பேணிச் செல்லப்படாதிருந்தமையால் மீன்பிடி வெகுமதி நிதியத்தின் செயலாற்றல் அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகள் தொடர்பாக விபரங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | முன்னைய ஆண்டுகளில் இருந்து அமுல்படுத்தப்படுகின்ற வழக்கு தகவல்களுக்குரிய வழக்கு கோவைகள் நாளது வரையாக்கப்படுவதுடன், செயலாற்றல் அறிக்கையில் அந்த தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. இந்த ஆண்டு முதல் அந்த தகவல்களை ஒவ்வொரு அறிக்கையிலும் நாளதுவரையாக்கி செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் அறிக்கை சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |